துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.3.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, உயரதிகாரிகள் அன்சுல் மிஸ்ரா , நா.காளிதாஸ், வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுவரும்

15,455 அடுக்குமாடிக் குடியிருப்பு பணிகளை விரைந்து நிறைவேற்றுக!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – அலுவலர்களுக்கு அறிவுரை!

சென்னை,மார்ச்.18-

சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் 15,455 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை உரிய காலத்தில் முடிக்க வேண்டும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.3.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னையில் 34 திட்டப் பகுதிகளில் 16,888 அடுக்குமாடி குடியிருப்புகளும், தமிழ்நாடு முழுவதும் இதர மாவட்டங்களில் 100 திட்டப் பகுதிகளில் 30,041 அடுக்குமாடி குடியிருப்புகளும் என மொத்தம் 134 திட்டப்பகுதிகளில் ரூ.5,330 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 46,929 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது சென்னை மற்றும் சுற்றியுள்ள 48 திட்டப் பகுதிகளில் 15,455 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளன. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு வரும் 15,455 அடுக்குமாடி குடியிருப்புகள் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வீடுகளை வழங்கும் வகையில் அலுவலர்கள் தொடந்து ஆய்வு மேற்கொண்டு கட்டுமான பணிகளை கண்காணித்திட தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், வாரிய திட்டப்பகுதிகளில் மின் இணைப்பு, குடிநீர் இனைப்பு, கழிவுநீர் இணைப்பு ஆகிய பணிகளை ஒருங்கிணைத்து உரிய நேரத்தில் முடிக்க வேண்டும் என்று தெரிவித்தார். புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியிருப்புகளில் பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்கவும் துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதிக்கழக துணைச் செயலாளர் அ எஸ்.கே.ராஜ் மகன், 62 வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் ரா.கேசவன் ஜனனி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி எழும்பூரில் நேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்தினார். உடன் நே.சிற்றரசு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் எம்.ஓ.பி. வைணவ கல்லூரி சார்பில்

ரூ.30 லட்சத்தில் மேம்படுத்தப்பட்ட மாநகராட்சி பூங்கா!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 18-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.3.2025) சென்னை நுங்கம்பாக்கத்தில் நமக்கு நாமே திட்டத் தின் கீழ் எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புகளின் மேம்பாட்டில் அரசுடன் பொதுமக்களும், தனியார் நிறுவனங்களும் பங்கேற்க வேண்டும் என்று முத்தமிழ் றிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையால் உதித்த திட்டம்தான் "நமக்கு நாமே திட்டம்". இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்பு ஒரு பங்கு என்றால், தமிழ்நாடு அரசின் பங்களிப்பு இரண்டு பங்காக இருக்கும். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப, பல்வேறு உள்கட்டமைப்பு பணிகள் பொதுமக்களின் பங்களிப்புடன் அரசின் 2 பங்கு நிதியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை அனைத்து வகையிலும் முதலாவது மாநிலமாக உருவாக்க திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றார்கள். சென்னையை சிங்காரச் சென்னையாக உருவாக்கிட பூங்காக்கள், பல்வேறு வகையான பாலங்கள், சாலைகள், உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், மெட்ரோ ரயில் என பல்வேறு வசதிகளை மக்களுக்காக செயல்படுத்தி வருகின்றார்கள்.

முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்கு துணை நிற்கும் வகையில் நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைணவக் கல்லூரி அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவை கல்லூரியை சுற்றியுள்ள பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் கல்லூரியின் மாணவிகள் பயன்படுத்திடும் வகையில், எம்.ஓ.பி. வைணவக் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 சதவீத முழுப் பங்களிப்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேம்படுத்தியுள்ளனர்.

அதனடிப்படையில் இந்த பூங்காவில் குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி பகுதி, நடைபாதை, இருக்கைகள், 35 நபர்கள் அமர்ந்து பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்ட கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கான திறந்தவெளி சிறுகலையரங்கம், மழைநீர் சேகரிப்பு தொட்டி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள், உலர் கழிவுகளை உரமாக்கும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, சிசிடிவி கண்காணிப்பு, 24 மணி நேர பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த பூங்காவின் பராமரிப்பு பொறுப்பையும் கல்லூரியே ஏற்றுக் கொண்டுள்ளது.

மேலும் இக்கல்லூரி மேற்கொண்டுள்ள மரம் நடும் திட்டத்தின் கீழ் கல்லூரிக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மலர்மாலைக்கு பதிலாக 'மரம் சான்றிதழ்' வழங்குவதுடன், வருகை தந்த விருந்தினரின் பெயரில் ஒரு மரத்தை நட்டு, பராமரித்து வருகின்றது. இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்களை சிறப்பித்து கல்லூரியின் முதல்வர் "மரம் சான்றிதழை" வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, எம்.ஓ.பி. வைணவ கல்லூரி முதல்வர் முனைவர் அர்ச்சனா பிரசாத், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ண மூர்த்தி, மத்திய வட்டார ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், மாமன்ற உறுப்பினர் நந்தினி உள்பட கல்லூரி மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.